Registered as a Newspaper　பக்கங்கள் 04　விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　மக்கள் தினசரி　Peoples Daily

நாதம் 04　திருவள்ளுவர் ஆண்டு 2024　கார்த்திகை 23　( 08-12-93 )　புதன்கிழமை　ஓசை 293

## தென்னிலங்கையில் நிலநடுக்கம் பாரிய சேதம் எதுவுமில்லை

கொழும்பு உட்பட 13 இடங்களை நேற்று அதிகாலை சிறிய பூமியதிர்ச்சியொன்று தாக்கியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது இப் பூமி அதிர்ச்சி அதிகாலை 2-30 மணி அளவில் ஏற்பட்டது. மஹரகம, பிலியந்தல, கண்டி, களுத்துறை, ஆகிய பகுதிகளையும் தாக்கியஇந்நிலநடுக்கத்தால் இருசிறுவர்கள்காயமடைந்துள்ளனர்.சிறிதளவுஉடைமைச் சேதம் ஏற்பட்டுள்ளது சரியான உபகரணங்கள் எதுவும் இன்மையால் இந் நில நடுக்கத்தின் அளவை கணிப்பிடமுடியாமல் போய்விட்டதென வானிலை அவதான நிலையம் தெரிவித்தது. சில வீடுகளின் கூரைகள் சேதமடைந்ததாக அறிவிக்கப்படுகிறது. கொழும்பு நகரின் பல பகுதிகளிலும் இந் நில நடுக்கம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளை எதிர்கொள்ள மூன்றுபடிநிலை மூல உபாயங்கள்!

### அரசு கைக்கொள்ளுமென அறிவிப்பு

'பயங்கரவாதத்தை' எதிர்கொள்வதற்காக நாம் மூன்று படிமுறைகளான மூலோபாயத்தை கொண்டுள்ளோம் முதலாவது நாம் அரசாங்கம் பலவீனம் அடைவதை அனுமதிக்க முடியாது இரண்டாவது விடுதலைப் புலிகளின் அரசியல் தளத்தை பலவீனமாக்குதல். மூன்றாவது புலிகளை இராணுவ ரீதியாக பலமிழக்கச்செய்வது. இவை அனைத்தும் ஒரே சமயத்தில் மேற்கொள்ளப்படும். இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மலேசியாவில் பயங்கரவாதம் பிரிட்டிஷ் அரசால் வெற்றிகொள்ளப்பட்டது. அதற்கு காரணம் பிரிட்டன் அரசியல் ரீதியானதும் இராணுவரீதியானதுமான மூலோபாயங்களை உபயோகித்தமையே. மலேசியாவில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியான ஜெனரல் தொம்சன் எழுதிய நூல் ஒன்றை அண்மையில் வாசித்தபோது இது தெரியவந்தது எனவும் பிரதமர் கூறினார்.

நாம் எமது இராணுவ நடவடிக்கை, புலனாய்வுத்துறை என்பனவற்றை பலப்படுத்தி வருகிறோம். பாதுகாப்பு குழு கூட்டத்தில் இதுபற்றியே

(4ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு மீதான விமானத்தாக்குதல் ஷெல் வீச்சு நிறுத்தப்படமாட்டாது

### இராணுவத் தரப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ். குடாநாடு மீதான விமானத்தாக்குதலையும், ஷெல்வீச்சையும் நிறுத்துமாறு யாழ் அரச அதிபர் மாணிக்கவாசகர் அரசை வற்புறுத்தி கேட்டடுள்ள போதிலும்.குடாநாடு மீதான விமான மற்றும் ஆட்லறி தாக்குதல் நிறுத்தப்படமாட்டாது என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இத்த வலை ஐலன்ட் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

யாழ் அரச அதிபர் தமது வழமையான கொழும்பு விஜயத்தின் போது இம்முறை பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவை சந்தித்து மேற்படி கோரிக்கையை விடுத்தார். எனினும் ஆகாய மற்றும் பீரங்கி தாக்குதலை படையினர் நிறுத்தும் நிலையில் இல்லை என அவ் வட்டாரங்கள் கூறியதாக ஐலன்ட் ஏடும்தெரிவித்தது.

தற்போதைய பாதுகாப்பு நிலைமையில் இத்தகையதாக்குதல்களை நிறுத்த அரசு அனுமதிக்காது எனவும் படையினர் விமான அல்லது பீரங்கி அல்லது கனரக ஆயுதப் பிரயோகத்தை குடாநாடு மீது பிரயோகிக்க இதனால் தடை ஏற்படாது எனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன

# தோல்வியுறும் இராணுவத்திற்கு தளபதியாக இருக்கவிரும்பவில்லை!

### இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும்என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

### உருவப்படம் உள்ளே

பூநகரி-நாகதேவன்துறை கூட்டுத்தளம்மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த முன்னாள் முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் லெப். கேணல் நவநீதனின் உருவப்படம் உள்ளே

பிரான்ஸிடம் கொள்வனவு செய்த

## அதிவேக பீரங்கிப்படகு கொழும்பு வந்து சேர்ந்தது

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையினர் பிரான்ஸ் நாட்டிடம் இருந்து கொள்வனவு செய்துள்ள அதிவேக பீரங்கிப்படகுகளில் முதலாவது பீரங்கிப்படகு கடந்த வெள்ளியன்று கொழும்பு வந்து சேர்ந்தது. பாரிய சரக்கு கப்பல் ஒன்றில்

## சிசில் வைத்தியரட்னா தெரிவிப்பு

(கொழும்பு)

"தோல்விகாணும் இராணுவத்தின் தளபதியாக இருக்க நான் விரும்பவில்லை. இதனாலேயே நான் இராணுவத் தளபதி பதவியில் இருந்து விலகிக்கொள்ள விரும்புகிறேன்" இவ்வாறு சிறிலங்கா இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சிசில் வைத்தியரட்னா தெரிவித்துள்ளார்.

பெப்ரவரியில்

ஏனைய பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# தளபதியாக இருக்கவிரும்பவில்லை!

## சிசில் வைத்தியரட்னா தெரிவிப்பு

(கொழும்பு)

"தோல்விகாணும் இராணுவத்தின் தளபதியாக இருக்க நான் விரும்பவில்லை. இதனாலேயே நான் இராணுவத் தளபதி பதவியில் இருந்து விலகிக்கொள்ள விரும்புகிறேன்" இவ்வாறு சிறிலங்கா இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சிசில் வைத்தியரட்னா தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை காலி முகத்திடலுக்கண்மையில் உள்ள இராணுவத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற உயர்மட்டப் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்ட சமயமே சிசில் வைத்தியரட்னா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இவ் இரகசியமாநாட்டில் இராணுவத் தளபதி சிசில்வைத்தியரட்னா கலந்துகொள்ளவில்லை என முன்னர்வந்த செய்திகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜெரிசில்வாவின் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் கடந்த காலத்தில்இராணுவத்தினருக்கு ஏற்பட்ட தோல்விகள் குறித்து பல சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளாலும் பிரஸ்தாபிக்கப்பட்டதோடு சிசில் வைத்தியரட்னாவின் செயற்பாடுகள் குறித்தும் அவரது திறமைகள் குறித்தும் விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டன

இக்கூட்டத்தின் இறுதியில்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

பிரான்ஸிடம் கொள்வனவு செய்த

## அதிவேக பீரங்கிப்படகு கொழும்பு வந்து சேர்ந்தது

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையினர் பிரான்ஸ் நாட்டிடம் இருந்து கொள்வனவு செய்துள்ள அதிவேக பீரங்கிப்படகுகளில் முதலாவது பீரங்கிப்படகு கடந்த வெள்ளியன்று கொழும்பு வந்து சேர்ந்தது. பாரிய சரக்கு கப்பல் ஒன்றில் ஏற்றிவரப்பட்ட இப்பீரங்கிப்படகு 21 மீற்றர் நீளமானது. இதேபோன்று மேலும் மூன்று பிரான்ஸ் அதிவேக பீரங்கிப் படகுகள் சிறிலங்கா கடற்படையில் சேர்க்கப்படும்என எதிர் பார்க்கப்படுகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொப்பேக்கடுவ நினைவு மதவைபவம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

அராலி கண்ணிவெடிச் சம்பவத்தில் கொல்லப்பட்ட லெப். ஜெனரல் கொப்பேக்கடுவவின் நினைவாக அவரது குடும்பத்தினரால் நடாத்தப்படவிருந்த மத வைபவங்கள் திடீரென இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இதற்கான காரணம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

இது குறித்து கருத்துத் தெரிவித்த திருமதி லாலிகொப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி தாக்குதல் குறித்து சி. என். என்னிற்கு ரணில் பேட்டி

(கொழும்பு)

உலகின் பிரபல 24மணி நேர தொலைக்காட்சி சேவையான அமெரிக்காவின் சி.என்-என் ஒலிபரப்பில் அடுத்த வாரம் பூநகரியில் இடம்பெற்ற சம்பவம் குறித்து சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விபரிக்கவுள்ளார். இலங்கையில் தற்போது நடைபெற்றுவரும் உள்நாட்டு போர் குறித்து அந்நிறுவனம் தயாரித்த விவரண நிகழ்ச்சி ஒன்றிலேயே பிரதமர் ரணிலின் பூநகரி சம்பவம் குறித்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவ தளபதியை ஜனாதிபதி மூன்று மணிநேரம் தேடினாராம்

(கொழும்பு)

பூநகரிச் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்க இராணுவத் தளபதியை மூன்று மணிநேரமாக தேடியுள்ளார் இத்தேடுதல் வேட்டையின்போது இராணுவத் தளபதியை அவரால் சந்திக்க முடியவில்லை

இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரட்னாவை நேரடியாகச் சந்திப்பதற்காக சுமார் மூன்று மணிநேரமாக தொலைபேசி மூலம் ஜனாதிபதி ஆங்காங்கே அழைப்புக்கள் கொடுத்த வண்ணம் இருந்தார் ஆனால் அந்தநேரம் இராணுவத் தளபதி எங்கே இருந்தார் என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை இதனால் அவரைச்சந்திக்ஜனாதிபதி எடுத்த முயற்சி பயனற்றுப்போய்விட்டது இவ்வாறு கொழும்பில் இருந்து வெளியாகும் சிங்கள வாரப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## தொடர்ச்சியான ஷெல்வீச்சு வயோதிபர் ஒருவர் காயம்

(நமது நிருபர்)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து மக்கள் குடியிருப்புகள் மீது தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுக் காலை 11.30 மணிமுதல் பலாலிமுகாம் இராணுவத்தினர் புன்னாலைக் கட்டுவன் பகுதியை நோக்கியே தொடர்ச்சியாக ஒன்பது எறிகணைகளை ஏவினர். இவை வடக்கு புன்னாலைக் கட்டுவன், ஈவினை பகுதிகளில் வீழ்ந்து வெடித்

(4ஆம் பக்கம் பார்க்க)

## உருவப்படம் உள்ளே

பூநகரி-நாகதேவன்துறை கூட்டுத்தளம்மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த முன்னாள் முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் லெப். கேணல் நவநீதனின் உருவப்படம்

உள்ளே

## பெப்ரவரியில் கிழக்கு தேர்தல்?

(கொழும்பு)

ஒத்திவைக்கப்பட்ட கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல்கள் பெப்ரவரிஅல்லது மார்ச் மாதமளவில் நடைபெறலாம் என ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது முன்னதாக இத் தேர்தல் ஜனவரி இறுதிப் பகுதியில் நடாத்தப்பட திட்டமிடப்பட்டிருந்ததும் அது பின் ஒத்திவைக்கப்பட்டதும் தெரிந்ததே.

## 39 ராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகள்

(கொழும்பு)

பூநகரியிலும், யாழ். தேவி இராணுவ நடவடிக்கையின் போதும் யுத்த களத்தில் முன்னணியில் நின்று திறமையாகச் செயற்பட்ட பல இராணுவ அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன

பூநகரிச் சண்டையின் போது திறமையாகச் செயற்பட்ட கேணல் சாந்தக்கொட்டேக்கொட என்பவருக்கும் யாழ்தேவி நடவடிக்கையின் போது திறமையாகச் செயற்பட்ட கேணல் சரத்பொன்சேகாவுக்கும், கேணல் டீ. வி எஸ். சேனநாயக்காவுக்கும் பிரிகேடியர் பதவிகள்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## சீரற்ற காலநிலையை பயன்படுத்தி புலிகள் முகாம்களை தாக்கலாம்

### இராணுவ அதிகாரிகள் அச்சம்

(கொழும்பு)

வடபகுதியில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையை பயன்படுத்தி விடுதலைப் புலிகள் முல்லைத்தீவு, ஆனையிறவு இராணுவ முகாம்களை தாக்கலாம் என இராணுவ அதிகாரிகள் அச்சம் தெரிவித்திருப்பதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கொந்தளிப்பான கடலும், கடும் மழையும் புலிகள் மேற்கொள்ளும் தாக்குதலுக்கு வாய்ப்பாக இருக்கும் எனவும் இந்த காலநிலை காரணமாக மேலதிக படைகளையோ அல்லது விநியோகத்தையோ மேற்கொள்ள முடியாது எனவும் கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்

கடும் மழையின் மத்தியில் பூநகரிமீது நடத்திய தாக்குதலின் அதே யுக்தியை பயன்படுத்தி இத்தகைய தாக்குதல்களை புலிகள் தொடர திட்டமிட்டுள்ளதாக புலனாய்வு அறிக்கைகள் கூறுவதாகவும் அவ்வதிகாரிகள் கூறினர். மோசமான காலநிலையில் விமானப்படையோ அல்லது கடற்படையோ தரைப்படைக்கு உதவமுடியாது என்பது புலிகளுக்கு தெரியும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்

கிழக்கில் தற்போது புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்கள் திசை திருப்பும் நடவடிக்கை எனவும் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என ஐலண்ட் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

## நாகதேவன்துறை கடற்படைத் தளம் மீள அமைப்பது பற்றி முடிவு இல்லை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் ஒபரேஷன் தவளை நடவடிக்கை மூலம் அழிக்கப்பட்ட பூநகரி-நாகதேவன்துறை படைத் தளங்களில் நாகதேவன்துறை கடற்படை முகாமை மீள அமைப்பது தொடர்பாக இன்னும் உறுதியான முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை. இவ்வாறு இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளதாக சண்டே ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

நாகதேவன்துறை கடற்படை முகாமை மீள அமைக்க இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும், அப்பகுதியில் விடுதலைப் புலிகள் இல்லாத நிலையிலும் புனர் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படாமை அங்கு உடனடியாக கடற்படை முகாம் அமைக்கும் யோசனை இல்லை என்பதையே காட்டுகிறது எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஆழம் குறைந்த கடற்பகுதியில் கடற்புலிகளின் அச்சுறுத்தலுக்கு எதிர்கொள்ள அண்மையில் இழந்த ஆழம்குறைந்த கடலில் செல்லக்கூடிய ரோந்துப் படகுகளுக்கு ஈடாக மேலும் படகுகள் தமக்கு தேவை என கடற்படையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கொழும்பு மாவட்டத்தில் ரணில் போட்டியிடுவார்?

(கொழும்பு)

சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட தீர்மானித்துள்ளதாக அரசாங்க கட்சி வட்டாரங்கள் 'ராவய' பத்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### வெற்றுப்போத்தல்கள் தேவை

வெற்றுப் போன்விட்டா, மாமைட், வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் மூடியுடனும் ஜாம், புறோடினேக்ஸ், பியர், கோடியல் போத்தல்கள் மூடியில்லாமலும் எம்மால் கொள்வனவுசெய்யப்படுகிறது ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (சி/8054)

### போர் முரசம்கேட்கிறது

'போர் முரசம் கேட்கிறது' 'கொழும்பில் கல்யாணம்' நாடகங்களை எழுதித் தயாரித்தஅராலியூர் ந சுந்தரம்பிள்ளையின் வானொலி நாடக நூல், முதலாம்பிள்ளை 30. |-- சில பிரதிகளே உள்ளன பூபாலசிங்கம் புத்தக சாலை (6791)

### நீமாரொக்சும் குப்பி விளக்கும்

தீய விளைவு ஏதுமில்லை. விளக்கெரிந்து ஒளி பரப்ப, கிளம்பும் புகை நுளம்பைவிரட்டுகிறது. ஒரு செலவில் இரட்டிப்புப் பயன் கடையில் ''நீமா ரொக்ஸ்'' என்றுகேட்டுவாங்குங்கள். மில்க் வைற். (சி/8075)

### தவறிவிட்டது

3-12-93 அன்று கல்வியங்காட்டிற்கும் - இலங்கை வங்கி யாழ்ப்பாணத்திற்கும் இடையில் அறிமுக அட்டையும் (687000463V) வங்கி கணக்கிலக்க புத்தகமும் (36476) டயரியும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் (6803)

### தவறிவிட்டது

658412663V எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கிளிநொச்சியில் தொலைந்துவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் (6805)

### கோழி திருட்டு

(யாழ்ப்பாணம்)

## வீதியால் சென்ற லொறி கடைக்குள் புகுந்தது

(தென்மராட்சி)

வீதியால் சென்று கொண்டிருந்த லொறி ஒன்று திடீரென கடை ஒன்றிற்குள் புகுந்து விபத்திற்குள்ளான சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் மீசாலைப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, சம்பவ தினம் மாலை வீதியால் சென்று கொண்டிருந்த லொறி ஒன்று திடீரென அதன் சக்கரத்தில் ஏற்பட்ட கோளாறினால் மீசாலைச் சந்தியில் இருந்த கடை ஒன்றிற்குள் திடீரெனப் புகுந்து கொண்டது இதன்போது அக் கடையின் ஊழியர்களும், பொதுமக்களும் கடையின் பின்பகுதியில் புகுந்து தப்பித்துக் கொண்டனர். இதனை அடுத்து அருகிலிருந்த வீட்டிற்குள்ளும் இவ்லொறி புகுந்து கொண்டது. இதனால் கடையும், வீடும் சேதமடைந்ததுடன் லொறியும் பலத்த சேதமடைந்தது. (86)

## வசதிகள் செய்யப்படாததால் தமிழர்கள் பெரும் பாதிப்பு

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு பலவந்தமாக அனுப்பி வைக்கப்பட்ட தமிழ் அகதிகளுக்கு அங்கு எதுவித வசதிகளும் செய்து கொடுக்கப்படவிலலை எனத் தெரிய வருகின்றது. கொழும்பு நகரிலுள்ள முகாம்களில் இருந்து மட்டக்களப்பு நாவலடி முகாமுக்கு கொண்டு வரப்பட்ட இவர்கள் பின்னர் வாழைச்சேனை பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களுக்கு கடந்த செப்டம்பர் மாதம் முதல் எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

## ஊசி மருந்தின்மையால் பிரசவத் தாய்மார் அவதி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரசவத் தாய்மாருக்கு ஏற்றப்படும் ''றோகன்'' என்னும் ஊசி மருந்திற்குப் பலத்த தட்டுப்பாடேற்பட்டுள்ளமையால் பிரசவத் தாய்மார்கள்பலத்த இன்னல்களை அனுபவிக்க வேண்டிய அவல நிலை தோன்றியுள்ளதாக கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் வைத்தியசாலைக்கு சுகாதாரத் திணைக்களம் நீண்டகாலமாக இந்த ஊசி மருந்தை அனுப்பிவைக்கவில்லையாம் இம்மருந்து தனியார் மருந்து விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளமுடியாமல் இருக்கின்றது. பிரசவத்தாய்மாரின் நன்மை கருதி இந்த ஊசிமருந்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச்சபை யாழ், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரை அவசரமாகக் கேட்டுள்ளது (25)

---

வடபிராந்திய போக்குவரத்து சபை

அந்தியகால நன்கொடை இளைப்பாற்று

## நலன்புரிச் சங்கம்

மேற்படி சங்கம் வ. பி. போ. சபையின் சகல ஊழியரின் இளைப்பாற்றுக்கால அந்தியகால நன்மை கருதி அவர்களின் மாதாந்த சந்தாப்பணத்தினால் 1979-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒரு சங்கமாகும்.

தற்கால சூழ்நிலை காரணமாக இதனைத் தொடர்ந்தும் நடத்த முடியாத காரணத்தினால் இதனை மூடி விடுவதற்கும், அங்கத்தவர்கள் செலுத்திய சந்தாப் பணத்தினைத் திருப்பிக் கொடுப்பதற்கும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது.

தாம் செலுத்திய சந்தாப்பணத்தினை இன்னும் பலர் திருப்பிப் பெறவில்லை. இவ் ஊழியர்களுடன் இச் சங்கம் தொடர்புபட முடியாமல் இருப்பதினால் இப் பகிரங்க அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

---

## தொண்டாவின் வருகைக்காக எமது கதவுகள் திறந்துள்ளன

- ஜி. எம். பிரேமச்சந்திரா

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கதவுகள் தொண்டமானின் வருகைக்காக எப்போதும் காத்திருக்கிறது. இவ்வாறு வடமேல் மாகாண முதலமைச்சரும், ஜனநாயக ஐக்கியதேசியமுன்னணியின் பொதுச் செயலருமான ஜி. எம். பிரேமச்சந்திரா கூறியுள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் விபரிக்கையில், நாட்டின் பெருமளவினரான தொழிலாளர்களைத் தன்னகத்தே கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் உரிமைகளுக்காக நடத்தும் போராட்டங்களை ஆதரிப்பது என்று கொள்கை ரீதியாக முடிவு செய்துள்ளோம். பெருந்தோட்டத்துறை இந்நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகித்து வருவது தெரிந்ததே'

தொண்டமான் ஒரு நேர்மையான அரசியல்வாதி. அவர் கடந்த 16 ஆண்டுகளுக்கும் மேலாக தான் சார்ந்த கட்சிக்கு விசுவாசமாக உழைத்து இருக்கிறார். ஐ தே. கவை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வதில் அவர் பெரும் பங்காற்றி இருக்கின்றார். ஆனால் அரசாங்கம் இப்போது அவருக்கு மாசு கற்பிக்க முற்படுகின்றது. எனவேதான் அவர் சரியான தருணத்தில்சரியான முடிவை மேற்கொண்டிருப்பதாக நான் நினைக்கின்றேன்.

அத்துடன் இ. தொ. கா. தனது தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடுவதில் தவறு எதுவும் இல்லை என்றும், அரசாங்கம் தனக்குரிய வளங்களை பல்வேறு வழிகளில் துஷ்பிரயோகம் செய்யும்போது உழைக்கும் தொழிலாளர்களுக்கு அவை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனக் கோருவது நியாயமானதே என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை 'ஐலண்ட்' நிருபரிடம் பேசிய அமைச்சர் தொண்டமான் ''இ. தொ. கா - ஐ. தே. க உறவில் விரிசல்களை உண்டுபண்ணியது அரசாங்கமேஎன்றும், எனவே இந்த உறவைச் சீராக்க வேண்டுமானால் நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கமே ஆகும்.'' எனத் தெரிவித்தார். அத்துடன் ஒரு அரசியல்வாதி என்ற வகையிலோ அமைச்சர் என்ற வகையிலோ நான் முடியாதது எதையும் எப்போதும் கோரியதில்லை.

மலையகத்தோட்டத் தொழிலாளருக்கு நன்மை ஏற்படும்வகையில்தான் நான் கோரிக்கைகளை முன்வைக்கிறேன். இதனைக் கோருவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஏனெனில் நாட்டிற்கு பெரிய பங்கு வருமானத்தை ஈட்டித் தருவது அவர்களேயாகும். எனது கோரிக்கைகள் நாட்டின் வளமான வருங்காலத்துடன் தொடர்புபட்டிருப்பது தற்செயலானது.

மேலும் தனது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லையானால் ஐ தே. கவுடனும், அரசுடனும் தொடர்ந்தும் ஒத்துழைப்பது சாத்தியமற்றுப் போகலாம் எனவும், எனினும் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் தொண்டமான் வலியுறுத்திக் கூறினார்.

## 10 பெண்கள் கைது

(கொழும்பு)

சுங்கத் திணைக்களத்திற்கு பிரகடனம் செய்யாது ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை சென்னையிலிருந்து கொண்டுவந்த 10 பெண்கள் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் அதிகாரிகளிடம் சிக்கிக் கொண்டனர். ஒவ்வொருவரும் 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தியதுடன் பொருள்களையும் பறி கொடுத்தனர்

இவர்கள் சென்ற வாகனத்தைமறித்துசோதனையிட்ட போது புடைவைகளும் மூன்று தங்கக்கட்டிகளும் கடத்தி வரப்பட்டது கண்டுபிடிக்கப் பட்டது.

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை அன்ராஜ் (இன்பராஜ்)

(தங்கராசா ஜெயசிலன்)

மலர்வு 17.01.1979

வீரச்சாவு 08.12.1991

08-12-1991 அன்று வளலாயில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.

கரணவாய் ஊர் கண்டெடுத்த கண்மணி

களப்புலிகள் வாழ்த்திடும் ஜெயமணி

---

## படிவங்களை உடன் சமர்ப்பிக்கப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கைத் திறன் கல்வி மூலப்பொருள்களுக்கான நிதியைப் பெறுவதற்கான பணக்கொடுப்பனவு படிவங்களை இதுவரை சமர்ப்பிக்காத பாடசாலை அதிபர்கள் அவற்றை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் பணக்கொடுப்பனவு படிவங்களுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாதென முறைசாரா பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ச)

## சிறிலங்கா இன்னுமொரு 'பேரு' ஆகக்கூடாது

### பொலிஸ் மா அதிபர்

(கொழும்பு)

சிறிலங்காவை இன்னுமொரு பேருவாக அல்லது

இதழுக்கு தமக்கு முன்னுள்ள பிரதான கடமைகள் பற்றி விளக்கிய அவர் மேலும் கூறு

யில் அடிமுக அடையாள அட்டையும் (687000463V) வங்கி கணக்கிலக்க புத்தகமும் (36476) பயரியும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழுங்கப்படும்.
(6803)

## தவறிவிட்டது

658412663V எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கிளிநொச்சியில் தொலைந்துவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்
(6805)

## கோழி திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் செம்மணி வீதியில் கடந்த இரவு 48 கோழிகள் திருடப்பட்டுள்ளதாக புகாரிடப்பட்டுள்ளது

சம்பவ தினம் நள்ளிரவு வேளை நாகேந்திரம் என்பவரின் வீட்டுவளவிற்குள் புகுந்த திருடர்கள் அங்கு கூட்டிற்குள் விடப்பட்டிருந்த 48 கோழிகளையும் பிடித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக உரிமையாளர் காவல் பணிமனையில் புகார் செய்துள்ளார்-

## தொழில் முயற்சிக்கு கடன் வழங்கல்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு அம்பன் கிராமத்தில் உள்ள 23 குடும்பங்களுக்கு போறாட் நிறுவனம் கிராம அபிவிருத்தித திட்டத்தின்கீழ் தொழில் முயற்சிக கடன்களை வழங்கி இக் குடும்பங்களின் தொழில் முயற்சிகளை ஊக்குவித்துள்ளது இதில் 10 குடும்பங்களுக்கு கோழி வளர்ப்புக்கான கடனுதவிகளும், 13 குடும்பங்களுக்கு கமச் செய்கைக்கான கடனுதவிகளும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(25)

## கண்டெடுப்பு

கோண்டாவில் மேற்கு இந்து மகாவித்தியாலயம் அருகில் நீல நிறப் பை ஒன்று கண்டெடுக்கப்பட்டுஈழநாதம் காரியாலயத்தில் செ. பாஸ்கரன் என்பவரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது

## விரிவுரை ஆரம்பம்

யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்று வரும், தேசிய கல்வி நிறுவனத்தின் இரண்டாம் வருட மாணவருக்கான வகுப்புகள் எதிர்வரும் 9 ம் 10-ம் திகதிகளில் மீண்டும் ஆரம்பமாகுமென சிரேட்ட விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்தார்.

---

மாக இந்த ஊசி மருந்தை மாகக் கேட்டுள்ளது (25)

### வடபிராந்திய போக்குவரத்து சபை அந்தியகால நன்கொடை இளைப்பாற்று

## நலன்புரிச் சங்கம்

மேற்படி சங்கம் வ. பி. போ. சபையின் சகல ஊழியரின் இளைப்பாற்றுக்கால அந்தியகால நன்மை கருதி அவர்களின் மாதாந்த சந்தாப்பணத்தினால் 1979-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒரு சங்கமாகும்.

தற்கால சூழ்நிலை காரணமாக இதனைத் தொடர்ந்தும் நடத்த முடியாத காரணத்தினால் இதனை மூடி விடுவதற்கும், அங்கத்தவர்கள் செலுத்திய சந்தாப் பணத்தினைத் திருப்பிக் கொடுப்பதற்கும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது.

தாம் செலுத்திய சந்தாப்பணத்தினை இன்னும் பலர் திருப்பிப் பெறவில்லை. இவ் ஊழியர்களுடன் இச் சங்கம் தொடர்புபட முடியாமல் இருப்பதினால் இப் பகிரங்க அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

1994-ம் ஆண்டு பங்குனி மாதம் 08-ம் திகதிக்கு முன்னர் இவ் அங்கத்தவர்களோ, இவர்களின் மரபுரிமைக் காரர்களோ அல்லது இவ் அங்கத்தவரினால் சட்டபூர்வமாக அதிகாரம் அளிக்கப்பட்டவர்களோ, வ பி. போ. சபையின் பிராந்திய கணக்காளரிடமிருந்து அவர்களுக்கென ஒழிப்புனரால் ஒதுக்கப்பட்ட பணத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

இத் திகதிக்கு பின்னர் எக்காரணம் கொண்டும் எவருக்கும் அவர்களுக்கான பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதினை அறியத்தருகிறேன்.

*V. S.* சொக்கலிங்கம்
செயலாளர்
அ. ந. இ. ந. சங்கம், வ. பி. போ. சபை
கோண்டாவில்

(6798)

---

## பட்டப்படிப்புகள் கல்லூரி

### புதிய மாணவர்களை அனுமதித்தல்

### கல்வியாண்டு 1994 95

பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களின் வெளிநிலைப் பட்டப் பாடநெறிகளான,

- கலைமாணி B. A.
- விஞ்ஞானமாணி B. Sc. (புள்ளிவிபரவியல்)
- வணிகமாணி B. Com.

க. பொ. த. உயர்தரம் 3பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

1993 ஆகஸ்ட் பரீட்சைகளுக்குத் தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விரிவுரைகள் 11-12-1993இல் ஆரம்பமாகின்றன.**

விபரங்களுக்கு:

உதவிப் பதிவாளர்,
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஃ வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும் நிறுவனம் யாழ் நகரில் இதுவே.

(சி-8068)

---

## படிவங்களை உடன் சமர்ப்பிக்கப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கைத் திறன் கல்வி மூலப்பொருள்களுக்கான நிதியைப் பெறுவதற்கான பணக்கொடுப்பனவு படிவங்களை இதுவரை சமர்ப்பிக்காத பாடசாலை அதிபர்கள் அவற்றை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு மூன் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் பணக்கொடுப்பனவு படிவங்களுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாதென முறைசாரா பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.
(ச)

## சிறிலங்கா இன்னுமொரு 'பேரு' ஆகக்கூடாது

### பொலிஸ் மா அதிபர்

(கொழும்பு)

சிறிலங்காவை இன்னுமொரு பேருவாக அல்லது கொலம்பியாவாக மாறுவதற்கு இடமளிக்கப்படக்கூடாது இவ்வாறு புதிய பொலிஸ்மா அதிபராக பொறுப்பேற்றுள்ள பிராங்ட்டி சில்வா கூறியுள்ளார்.

சண்டே ஒப்சேர்வர் வார இதழுக்கு தமக்கு முன்னுள்ள பிரதான கடமைகள் பற்றி விளக்கிய அவர் மேலும் கூறுகையில், பேருவும், கொலம்பியாவும் போதைப்பொருள்கள் கடத்தல் நடவடிக்கையில் முன்னணி வகிக்கின்றது. அத்தகையதொரு நிலை கொழும்புக்கும் ஏற்படுவதற்கு நாம் இடமளித்தல் ஆகாது என்றார்.

## வாழ்க்கைத்திறன் கல்வி அடுத்த ஆண்டில் போதிக்கப்படும்

யாழ். மாவட்ட பாடசாலைகள் அனைத்திலும் அடுத்த வருடம் முதல் வாழ்க்கைத்திறன் கல்வி அமுல் படுத்தப்படவுள்ளது.

1987-ம் ஆண்டு முதல் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இக் கல்வித்திட்டம் இவ் ஆண்டுடன் முழுமை பெறுவதாகவும் 1994 ஜனவரி முதல் யாழ் மாவட்டத்தில் உள்ள 263 பாடசாலைகளிலும் நடாத்தப்படவுள்ளதாகவும் முறைசாரா கல்விப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு சுப்பிரமணியம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.
(ச)

---

## 8-வது வெற்றுப்போத்தல் பரிசு குலுக்கல்

### போட்டியில் பரிசுபெற்றோர் இலக்கங்கள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1618 | 2917 | 3183 | 3525 |
| 1627 | 2925 | 3473 | 3540 |
| 1629 | 2935 | 3485 | 3550 |
| 1631 | 2944 | 3487 | 3602 |
| 1633 | 2946 | 3512 | 3603 |
| 1664 | 2947 | 3514 | 3605 |
| 1667 | 2948 | 3516 | 3608 |
| 2577 | 3167 | 3517 | 3621 |
| 2684 | 3169 | 3522 | 3627 |
| 2690 | 3180 | 3524 | 3628 |

9ஆவது போட்டியில் இன்றே பங்குபற்றுங்கள். பங்குபற்றுவதற்கான நிபந்தனை ஜாம், கோடியல் OR பியர் ஏதாவது 5 போத்தல்களை கொடுத்து அதற்கான பணத்துடன் ஒரு அதிஷ்டலாப சீட்டையும் பெற்றுக் கொள்ளவும்.

**TASTE LINE INDUSTRIES (PVT) LTD.**
14, SEENIAR LANE, JAFFNA.

(சி-8076)

---



## வீரவேங்கை அன்ராஜ் (இன்பராஜ்)

(தங்கராசா ஜெயசீலன்)

| மலர்வு | வீரச்சாவு |
|---|---|
| 17.01.1979 | 08.12.1991 |

08-12-1991 அன்று வளலாயில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.

கரணவாய் ஊர் கண்டெடுத்த கண்மணி
களப்புலிகள் வாழ்த்திடும் ஜெயமணி
இளவயதில் ஈழங்கண்டிட புகுந்தமணி
எதிரிகளை கொன்றொழித்த புலிமணி

உங்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

கரணவாய் மேற்கு,
அத்திரான். (6788)

- குடும்பத்தினர்.

---

## நினைவு கூருகின்றோம்...

## 1993-12-08

1984-ம் ஆண்டு இதேதினத்தில் யான்- ஓயாவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

**சீலன்** (ஆ. சத்தியநாதன்-முருங்கன்-மன்னார்)

1988ஆம் ஆண்டு மன்னார்- குஞ்சுக்குளம் பகுதியில் தேசவிரோதிகளால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

**ரஞ்சன்** (மதியாபரணம் தனராஜ் - பெரியதம்பனை மடுக்கோயில்)

யாழ்ப்பாணத்தில்' தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட, 180, யாழ் நாவலர்வீதியைச்சேர்ந்த சிற்றூர்சங்கத் தலைவ்ரான தமிழ்ப் பொதுமகன்,

1989ஆம் ஆண்டு யாழ் - குடாநாட்டில் பரவலாக இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட எமது ஆதரவாளர் 06 பேர்.

1991ஆம் ஆண்டு அச்சுவேலி, வளலாய்ப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**அன்ராஜ் இன்பராஜ்** (தங்கராசா ஜெயசீலன்- அத்திரான் குடியிருப்பு கரவெட்டி யாழ்)

1992ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட எதிர்பாராத விபத்தில் எமைப்பிரிந்த-

**இளங்குயில்** (ஜெகராணி காஸ்மீர்-மாதகல்-யாழ்)

வவுனியாவில் - முஸ்லீம் சிங்களக் காடையர்களால் கொல்லப்பட்ட தமிழ்வர்த்தகர் உட்பட 2 தமிழர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன்இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி 8070)

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

புல்லறிவாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின் மேலிட்ட கலம்.

-- ஔவையார்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 08-12-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

# மீண்டும் பேயுடன் கூட்டு

தமிழரின் போராட்டத்தை ஒடுக்க ''எந்தப் பேயுடனும் கூட்டுச் சேரத் தயார்'' என்ற முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் நிலைப்பாட்டில் இருந்து இன்றைய சிறிலங்கா அரசும் இம்மியளவு மாறவில்லை போன்றே தெரிகின்றது. இதனை வெளிப்படுத்துமாப் போலவே, தற்பொழுது மீண்டும் வெளிநாட்டுப் பயிற்சியையும், நிபுணத்துவத்தையும் தமிழருக்கு எதிரான போரில் பெரியளவில் பயன்படுத்த அரசு ஆலோசித்து வருகின்றது.

தமிழருக்கு எதிரான போரில், வெளிநாட்டுப்பயிற்சி வெளிநாட்டு நிபுணத்துவம் என்பது புதியதொரு விடயமல்ல. முதலாம் கட்ட ஈழப்போரின் போதும், இஸ்ரேலிடம் இருந்தும், பிரிட்டிஷ் கூலிப்படைகளிடமிருந்தும், நிபுணத்துவ உதவிகளையும், பயிற்சியையும் சிறிலங்கா அரசு பெற்றுக் கொண்டது. அதேவேளை, இந்தியாவும், பாகிஸ்தானும் சிறிலங்கா இராணுவ அதிகாரிகளுக்குப் பயிற்சியும் வழங்கியிருந்தன.

இருப்பினும், தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியை தடுத்து விடவோ, தோற்கடித்து விடவோ முடியவில்லை. இதற்கும் மேலாக, அதாவது, பயிற்சி நிபுணத்துவம் என்பனவற்றிற்கும் மேலாக, சுமார் இரண்டரை வருடங்கள் தமிழீழ தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை அழித்துவிட முனைந்த இந்திய இராணுவத்தாலும் தனது முயற்சியில் வெற்றி பெறமுடியவில்லை.

இந் நிலையில், மீண்டும் வெளிநாட்டுப் பயிற்சி, நிபுணத்துவம் என்பதில் சிறிலங்கா அக்கறை கொண்டுள்ளது இந்த வகையில், சிறிலங்கா அரசு பழையவர்களையோ அன்றி புதியவர்களையோ நாடமுடியும் இவ் விடயத்தில் இன்றுள்ள இராணுவ அரசியல் சூழ்நிலைகளை கருத்திற்கொள்ளுமிடத்து, கெரில்லாக்களுக்கு எதிரான நீண்ட போரை நடத்திவரும் இஸ்ரேலிடமோ அன்றி இந்தியாவிடமோ, உதவியைப் பெறக்கூடும். இதைத் தவிர பிரிட்டிஷ் கூலிப்படைகளிடம் இருந்தோ அன்றி பிரிட்டிஷ் அரசிடமோ, இவையாவற்றையும் மீறி அமெரிக்காவிடமோ உதவியைப் பெற முயலக்கூடும்.

ஆனால், சிறிலங்கா நினைப்பது போன்று தேசிய இனவிடுதலைப் போராட்டங்களுக்கு எதிராகவோ, அன்றி போராடடத்திற்கான தார்மீக பலம்பெற்ற கெரில்லாப் போராட்டங்களையோ உலகில் எந்த நாட்டு இராணுவமும்

# வைப்பிலிடப்பட்ட டினார்கள் இன்னமும் மாற்றப்படவில்லை

(கொழும்பு)

வளைகுடா யுத்த காலத்தில் சிறிலங்கா அரச வங்கிகளின் வேண்டுகோளுக்கு இணங்க வைப்பில்இடப்பட்ட குவைத் டினாருக்கு முழுப் பெறுமதியும் இதுவரை வழங்கப்படவில்லை என குவைத் நாட்டில் தொழில் புரிந்துவிட்டு யுத்தம் காரணமாக நாடு திரும்பியவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குவைத் -ஈராக் யுத்த காலத்தில் டினார் நாணயத்தை வைத்திருந்தவர்கள் அப்பணத்தை இலங்கைப் பணத்தில் மாற்றிக் கொள்வதற்கு முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இவ் வேளையில் இலங்கையிலுள்ள அரச வங்கிகள் டினார் நாணயத்தை இலங்கை ரூபாவில் மாற்றி வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்திருந்தன.

ஒரு குவைத் டினார் அப்போது 135ரூபா பெறுதியாக இருந்த போது வங்கியில் முதல் தடவை 26ரூபா 25 சதமும், இரண்டாவது தடவையாக 27ரூபாவும் ஒரு டினாருக்கு வழங்கப்பட்டது.

# மலையக தொழிலாளருக்கு விசேட அடையாள அட்டை

தோட்டப்பகுதியில் உள்ள மலையக தோட்டத்தொழிலாளர்கள் அனைவருக்கும் அரசு அடையாள அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி விஜேதுங்க உத்தரவிட்டுள்ளார்.

தோட்டப்பகுதியினுள் ஊடுருவும் 'பயங்கரவாதிகளிடமிருந்து' தோட்டத் தொழிலாளர்களை வேறுபடுத்தி இணங்காணவே இந் நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. தோட்டத் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்க கண்டிக் கச்சேரியில் ஆட்பதிவு ஆணையாளர் அலுவலகம் திறக்கப்படவுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களிடம் தற்போது அடையாள அட்டை இல்லாமையால் அவர்களும் பொலிசாரும் சிரமப்படுவதாகவும், மலையகத்தினுள் ஊடுருவியுள்ள பயங்கரவாதிகள் யார் என அடையாளம் காண முடியாதிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ். கல்வித் திணைக்களம்

# கணக்குப் பகுதிகுறித்து எவ்வித அறிவிப்பும் இல்லை

''புதிதாகசெயற்பட ஆரம்பித்துள்ள பதினான்கு கல்விக் கோட்டங்களுக்கும் 01 - 02 - 94-ல் இருந்து யாழ் கல்வித்திணைக்களத்தில் இருந்துசகல உத்தியோகத்தர்களும் செல்ல உள்ளார்கள் ஆனால் யாழ் கல்வித்திணைக்களத்தில் இயங்கிவரும் கணக்குக்கிளை உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட கல்விக் கோட்டங்களுக்கு இடமாற்றப் படவேண்டுமா என்பதும் கல்வித்திணைக்கள கணக்குப் பகுதி மூடப்பட வேண்டுமா என்பது தொடர்பாக கல்வி அமைச்சிடமிருந்தோ, வடகிழக்கு மாகாண கல்விஅமைச்சிடமிருந்தோ எதுவித அறிவித்தல்களும் இதுவரை கிடைக்கவில்லை''என யாழ்கல்வித் திணைக்கள கணக்காளர் திரு. ஆர். சுகுணதீரன் கடந்த ஞாயிறு யாழ் கல்வித்திணைக்கள இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

யாழ் கல்வித்திணைக்களத்திலும் கோட்டக்கல்வி அலுவலகங்களிலும்தற்போது கடமையாற்றும் இணைந்த சேவை உத்தியோகத்தர்கள் இணைந்து இவ் வைபவத்தை ஒழுங்கு செய்தார்கள் இதற்கு யாழ் கல்வித்திணைக்கள கணக்காளர் திரு. ஆர். சுகுணதீரன்தலைமை வகித்தார்கௌரவ விருந்தினர்களாக யாழ் தெற்கு கல்வி வலயப் பணிப்பாளர்செல்வி ரி பெரியதம்பி யாழ்வடக்குவலயகல்விப்பணிப்பாளர் திரு கந்தசாமி ஆகியோர்சமுகமளித்திருந்தனர்.

# புத்தளம் சீமெந்து தொழிற்சாலை; பாகிஸ்தானிய கம்பெனிக்கு விற்பனை

(கொழும்பு)

புத்தளம் சிமெந்துதொழிற்சாலையை பாகிஸ்தானிய தனியார் கம்பெனி ஒன்றுக்கு 1.96பில்லியன்ரூபாவிற்குவிற்பனை செய்வதற்குசிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தவக்கல்குறூப் ஒப் கம்பனி என அழைக்கப்படும் இக் கம்பனி இது தொடர்பாக ஏற்கனவே 49 மில்லியன் ரூபாய்களை சிறிலங்கா அரசுக்கு கொடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத் தொழிற்சாலையின் பிரதிப் பொதுமுகாமையாளரான பி. கலப்பதி இது தொடர்பாக கொழும்பில் மேலும் தகவல் வெளியிடுகையில், இந்த மாத முடிவுக்கு முன்பாக இப்பாரிய தொழிற்சாலை விற்கப்பட்டுவிடுமெனவும் அடுத்த ஆண்டு முதல் புதிய நிர்வாகத்தின் கீழ் இருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

பாக்கிஸ்தானிலிருந்து அண்மையில் வந்த தூதுக் கோஷ்டியொன்று இத்தொழிற்சாலையின் விற்பனை தொடர்பான இறுதி முடிவுகளை மேற்கொண்டிருப்பதாகவும் விற்பனைதொடர்பான சகல விடயங்களையும் பூர்த்தி செய்த நிலையில் இக் குழுவினர் கடந்த திங்களன்று நாடு திரும்பியதாகவும் குறிப்பிட்டார்.

புத்தளம் சீமெந்து தொழிற்சாலை தனியார் மயமாக்கப்பட்ட இரண்டாவது பெரிய தொழிற்சாலை என்பதும் காலி சீமெந்துதொழிற்சாலை தனியார் மயமாக்கப் பட்டபோது உள்ளூர்கம்பனி ஒன்றே அதன் நிர்வாகத்தை பொறுப்பேற்றது என்பதும் இதுவே வெளிநாட்டாருக்கு விற்கப்படும்முதலாவதுபெரிய தொழிற்சாலை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# படையினர் வாக்குமூலம் விசாரணைக்குழு பெற்றது

(கொழும்பு)

பூநகரி தாக்குதல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினர் இராணுவ,கடற்படை ஆஸ்பத்திரிகள் மற்றும் கொழும்பு பெரியாஸ்பத்திரி, ஜயவர்த்தனபுர ஆஸ்பத்திரி ஆகியவற்றில் சிகிச்சை பெற்றுவரும் படையினரிடமிருந்து வாக்கு மூலங்களைப் பெற்றுப் பதிவு செய்யும் பணியைப் பூர்த்தி செய்துள்ளனர். இவ் விசாரணைக் குழுவினர் பூநகரிப் பகுதிக்கும் சென்று அங்குள்ள நிலையை பார்வையிட இருப்பதுடன் அங்குள்ள படையினர் மற்றும் அதிகாரிகளின் வாக்கு மூலங்களையும் பெறவுள்ளனர்.

# முறைசாரா கல்விப் பிரிவில் இலத்திரனியல் நெறி ஆரம்பம்

யாழ் மாவட்டத்தில் முறைசாரா கல்வித்திட்டத்தின் கீழ் இலத்திரனியல் அறிமுகம் எனும் குறுங்கால பாடநெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது

யாழ் நல்லூர் ஸ்தான சி.சி தமிழ்க் கலவன் பாடசாலையில் எதிர்வரும் 10ஆம் திகதி மேற்படி பாடநெறி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது

இப்பயிற்சி நெறியில் முதற் கட்டமாக 40 மாணவர்கள் இப்பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் பாடசாலைகளில் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கே முன்னுரிமை வழங்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேற்படி பயிற்சிநெறி தொடர்ச்சியாக 15 நாட்களுக்கு நடைபெறும் எனவும் இக்காலப் பகுதியில் பத்து விதமான இலத்திரனியல் உபகரணங்களை உருவாக்குவதற்கான பயிற்சிகள் வழங்கப்படும் என முறைசாரா கல்விப்பிரிவின் பிரதி கல்விப் பணிப்பாளர் திரு. சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

# பனம்விதை நடுகை

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு அம்பன் கிராமத்திலுள்ள ''கரும்பிகாடு'' என்னும் இடத்தில் பனைவள அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 10,000 பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன. அம்பன் கிராம அபிவிருத்திச் சங்கம் மரநடுகைத் திட்டத்தின்கீழ் சவுக்கு, மலைவேம்பு போன்ற மரக்கன்றுகளைப் பொது இடங்களில் நாட்டியுள்ளதாகவும் கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

(25)

ஆண்டு 9 மாணவர்க்கான

# தொழில் நுட்ப பரீட்சை 15 இல் நடைபெறும்

(நமது நிருபர்)

யாழ் மாவட்டத்தில்ஆண்டு 9 மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில் நுட்ப சான்றிதழ் பரீட்சை எதிர்வரும் 15ம் திகதி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் நண்பகல் 1 மணிக்கு ஆரம்பமாகும் பரீட்சை 2-30 மணி வரை நடைபெறவுள்ளது. பகுதி 1, பகுதி 2 என இரு வினாத் தாள்கள் அமையவுள்ளன.

இப் பரீட்சை யாழ் மாவட்டத்தில் 100 பரீட்சை நிலையங்களில்நடைபெறவுள்ளதுடன் 15,000மாணவர்கள் தோற்றவுள்ளனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இப்பரீட்சார்த்திகளின்அடையாள அட்டைகளுக்குப் பதிலாக அவ்வப்பாடசாலை ஆசிரியர் களே மாணவர் களை அழைத்துச் சென்று பரீட்சை மேற்பார்வை யாளர்களுக்கு மாணவர்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவர் எனவும் கல்வித்திணைக்கள வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

(ச)

# புயல், வெள்ளத்தினால் பாதிப்பு

# ரஷ்யத் தேர்தல் குறித்து

போராட்டத்தின் வளர்ச்சியை தடுத்து விடவோ, தோற்கடித்து விடவோ முடியவில்லை. இதற்கும் மேலாக, அதாவது, பயிற்சி நிபுணத்துவம் என்பனவற்றிற்கும் மேலாக, சுமார் இரண்டரை வருடங்கள் தமிழீழ தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை அழித்துவிட முனைந்த இந்திய இராணுவத்தாலும் தனது முயற்சியில் வெற்றி பெறமுடியவில்லை.

இந் நிலையில், மீண்டும் வெளிநாட்டுப் பயிற்சி, நிபுணத்துவம் என்பதில் சிறிலங்கா அக்கறை கொண்டுள்ளது இந்த வகையில், சிறிலங்கா அரசு பழையவர்களையோ அன்றி புதியவர்களையோ நாடமுடியும் இவ் விடயத்தில் இன்றுள்ள இராணுவ அரசியல் சூழ்நிலைகளை கருத்திற்கொள்ளுமிடத்து, கெரில்லாக்களுக்கு எதிரான நீண்ட போரை நடத்திவரும் இஸ்ரேலிடமோ அன்றி இந்தியாவிடமோ, உதவியைப் பெறக்கூடும். இதைத் தவிர பிரிட்டிஷ் கூலிப்படைகளிடம் இருந்தோ அன்றி பிரிட்டிஷ் அரசிடமோ, இவையாவற்றையும் மீறி அமெரிக்காவிடமோ உதவியைப் பெற முயலக்கூடும்.

ஆனால், சிறிலங்கா நினைப்பது போன்று தேசிய இனவிடுதலைப் போராட்டங்களுக்கு எதிராகவோ, அன்றி போராடடத்திற்கான தார்மீக பலம்பெற்ற கெரில்லாப் போராட்டங்களையோ உலகில் எந்த நாட்டு இராணுவமும் வெற்றி கொண்டதாக இல்லை.

கெரில்லாப் போராட்டத்திற்கு எதிராக ஓரளவு வெற்றி பெற்றதாக கருதப்பட்ட இஸ்ரேல், தற்பொழுது பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன்-பி. எல். ஓ. -உடன்பாடு செய்து கொண்டுள்ளது. இதற்குக் காரணம் வெற்றியினால் ஏற்பட்ட பெருமிதம் அல்ல. பி. எல். ஓ. வைவிட 'கமாஸ்' 'ஹிஸ்புல்லா' போன்ற இயக்கங்கள் தீவிரமாகச் செயற்படத் தொடங்கியமையினாலேயே ஆகும். அதாவது, இஸ்ரேல் எதிர்கால அபாயத்தை கணிப்பிட்டே சமாதானம் செய்து கொண்டது.

இந்தியாவின் நிபுணத்துவமும், பயிற்சியும் இன்றைய காஷ்மீர் நிலவரத்தைக் கொண்டே கணிப்பிட்டுக் கொள்ளக் கூடியது ஆகும். அவர்களின் பயிற்சியும், நிபுணத்துவமும் அவர்களின் நாட்டிலேயே கைகொடுக்காத நிலையில், இலங்கையில் எவ்வாறு சிறிலங்கா அரசாங்கத்திற்குக் அவர்களால் கைகொடுக்க முடியும்?

பிரிட்டன் அரசோ பல தசாப்தங்களாக ஐரிஸ் விடுதலை இயக்கத்திற்கு -ஐ. ஆர். ஏ.- எதிராகப் போராடி களைத்துப் போய்விட்டது இன்று பிரிட்டிஷ் அரசாங்கம் ஐ. ஆர். ஏ யுடன் இரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளது. அத்தோடு, இன்றுள்ள பிரிட்டிஷ் கூலிப்படை அமைப்புக்களில் உள்ளவர்களும் ஐ. ஆர். ஏ க்கு எதிராக பிரிட்டன் இராணுவத்தில் இருந்தபோது போராடியவர்களே.

உலகின் முதல்தர வல்லரசான அமெரிக்காவோ, சேர்பியர்களின் கெரில்லாத் தாக்குதலுக்கு அஞ்சிபொஸ்னியா விவகாரத்தில் தலையிட விரும்பவில்லை. அத்தோடு, சோமாலியாவில் தரையிறங்கிய அமெரிக்கப் படைகள், யாரை தமது பரமவிரோதியாக அறிவித்தார்களோ இறுதியில் அவர்களுடன் உடன்பாடு செய்து கொள்ள முற்பட்டுள்ளனர், விரோதியாகக் கருதிய ஜெனரல் ஐடீற்றிற்கு எழுத்துமூலம் பாதுகாப்பு உத்தரவாதம் கொடுத்து பேச்சுவார்த்தைக்கு அழைத்துச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் அதற்கு உருவாகியது.

இந்நிலையில், சிறிலங்கா அரசாங்கம், தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை வெளிநாட்டுப் பயிற்சியுடனும், நிபுணத்துவத்துடனும் வெற்றி கொள்ளலாம் எனக் கருதுவது அதன் அறியாமை என்பதைவிட அதன் இனவெறியையே காட்டுகிறது எனலாம். ஆனால், பேயுடன் என்ன? பூதத்துடன் என்ன? எதனுடன் கூட்டுச் சேர்ந்தாலும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பது பகற்கனவாகவே இருக்கும் என்பதை சிறிலங்கா புரியும் மட்டும் அது பல தோல்விகளைச் சந்தித்தே ஆக வேண்டி வரும்.

---

''புதிதாகசெயற்பட ஆரம்பித்துள்ள பதினான்கு கல்விக் கோட்டங்களுக்கும் 01 - 02 - 94-ல் இருந்து யாழ் கல்வித்திணைக்களத்தில் இருந்துசகல உத்தியோகத்தர்களும் செல்ல உள்ளார்கள் ஆனால் யாழ் கல்வித்திணைக்களத்தில் இயங்கிவரும் கணக்குக்கிளை உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட கல்விக் கோட்டங்களுக்கு இடமாற்றப் படவேண்டுமா என்பதும் கல்வித்திணைக்கள கணக்குப் பகுதி மூடப்பட வேண்டுமா என்பது தொடர்பாக கல்வி அமைச்சிடமிருந்தோ, வடகிழக்கு மாகாண கல்விஅமைச்சிடமிருந்தோ எதுவித அறிவித்தல்களும் இதுவரை கிடைக்கவில்லை''என யாழ்கல்வித் திணைக்கள கணக்காளர் திரு. ஆர். சுகுணதீரன் கடந்த ஞாயிறு யாழ் கல்வித்திணைக்கள இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

யாழ் கல்வித்திணைக்களத்திலும் கோட்டக்கல்வி அலுவலகங்களிலும்தற்போது கடமையாற்றும் இணைந்த சேவை உத்தியோகத்தர்கள் இணைந்து இவ் வைபவத்தை ஒழுங்கு செய்தார்கள் இதற்கு யாழ் கல்வித்திணைக்கள கணக்காளர் திரு. ஆர். சுகுணதீரன்தலைமை வகித்தார்கௌரவ விருந்தினர்களாக யாழ் தெற்கு கல்வி வலயப் பணிப்பாளர்செல்வி ரி பெரியதம்பி யாழ்வடக்குவலயகல்விப்பணிப்பாளர் திரு கந்தசாமி ஆகியோர்சமுகமளித்திருந்தனர்.

---

## பனம்விதை நடுகை

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு அம்பன் கிராமத்திலுள்ள ''கரும்பிகாடு'' என்னும் இடத்தில் பனைவள அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 10,000 பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன. அம்பன் கிராம அபிவிருத்திச் சங்கம் மரநடுகைத் திட்டத்தின்கீழ் சவுக்கு, மலைவேம்பு போன்ற மரக்கன்றுகளைப் பொது இடங்களில் நாட்டியுள்ளதாகவும் கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

(25)

---

ஆண்டு 9 மாணவர்க்கான

## தொழில் நுட்ப பரீட்சை 15 இல் நடைபெறும்

(நமது நிருபர்)

யாழ் மாவட்டத்தில்ஆண்டு 9 மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில் நுட்ப சான்றிதழ் பரீட்சை எதிர்வரும் 15ம் திகதி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் நண்பகல் 1 மணிக்கு ஆரம்பமாகும் பரீட்சை 2-30 மணி வரை நடைபெறவுள்ளது. பகுதி 1, பகுதி 2 என இரு வினாத் தாள்கள் அமையவுள்ளன.

இப் பரீட்சை யாழ் மாவட்டத்தில் 100 பரீட்சை நிலையங்களில்நடைபெறவுள்ளதுடன் 15,000மாணவர்கள் தோற்றவுள்ளனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இப்பரீட்சார்த்திகளின்அடையாள அட்டைகளுக்குப் பதிலாக அவ்வப்பாடசாலை ஆசிரியர் களே மாணவர் களை அழைத்துச் சென்று பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு மாணவர்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவர் எனவும் கல்வித்திணைக்கள வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

(ச)

---

# புயல், வெள்ளத்தினால் பாதிப்பு 666கோடி ரூபாவுக்கு சேதம்

**- முதல்வர் ஜெயலலிதா**

(சென்னை)

தமிழ்நாட்டின் நாகபட்டினம் கரையோரத்தில் அண்மையில் வீசிய புயலாலும். அதற்கு முன்பாக கடந்த நவம்பர் மாதத்தில் பெய்த பெருமழையாலும் 666 கோடி ரூபா பெறுமதியுடைய சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் புயலாலும் மழையாலும் ஏற்பட்டசேதங்களை உலங்குவானூர்தியிலிருந்து பார்வையிட்ட பின்னர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழக முதல்வர் ஜெயலலிதா இதனைத் தெரிவித்தார். தஞ்சாவூர், நாகபட்டினம், காயிதே மில்லத். தென் ஆற்காடு - வள்ளலார், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களை நேற்று முன்தினம் உலங்குவானூர்தியிலிருந்து பார்வையிட்ட பின்னர் சென்னை திரும்பிய அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்தார்.

இப்போதைய புயலினால் சுமார் முன்னூறு கோடி ரூபாவுக்கு சேதம் ஏற்பட்டதாகவும் கடந்த மாதம் பெய்த மழையினால் 366 கோடி ரூபாவுக்கு சேதம் ஏற்பட்டதாகவும் மேலும் விபரித்தார்.

இதேவேளை தமிழ் நாட்டின் புயல் மற்றும் வெள்ள நிலைமைகளை நேரில் பார்வையிட்டு மதிப்பீடு செய்வதற்காக பிரதமர் பி.வி. நரசிம்மராவ் மத்திய வேளாண் துறை அமைச்சர் பல்ராம் ஜாக்கரிடம் பணிப்புரைவிடுத்துள்ளார்.

மேலும் புதுச்சேரி மாநிலத்தில் புயல் மழையினால் காரைக்கால் பகுதியில் மட்டும் 100 கோடி ரூபாவுக்கு சேதம் ஏற்பட்டிருப்பதாக புதுச்சேரி முதல்வர் வி.வைத்தியலிங்கம் கூறியுள்ளார்.

---

## மணிலாவில் புயல் 35 பேர் பலி

பிலிப்பைன்ஸ் தலைநகர்மணிலாவில்நேற்றுமுன்தினம்வீசிய கடும் புயல் காற்றினால் முப்பத்தைந்து பேர் வரை உயிரிழந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப் புயலினால் சுமார் 20,000க்கும் மேற்பட்டமக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். மணிக்கு 320கிலோ மீற்றர் வேகத்தில் இப்புயல் வீசியதாகவும், மற்றுமொரு புயல் விரைவில் தலைநகர் மணிலாவைக் கடக்கலாம்எனமணிலாவிலுள்ள வானிலை அவதானநிலையம் கூறியுள்ளது.

---

## பண்ருட்டி இராமச்சந்திரன் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்

பாட்டாளி மக்கள் கட்சியின் அடிப்படை உறுப்பினர் உட்பட அனைத்து பதவிகளில் இருந்தும் பண்ருட்டி எஸ். இராமச்சந்திரன் விலக்கப் பட்டுள்ளார் என்று பாட்டாளி மக்கள் கட்சி அறிவித்துள்ளது.

சென்னையில் நேற்று முன்தினம் இக்கட்சியின் மாநில செயற்குழு கூடியபோது இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டதாகவும் அக்கட்சி சென்னையில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம். ஜி ஆர். அமைச்சரவையில் மின்சக்தி மற்றும் எரிபொருள் துறை அமைச்சராக இருந்த பண்ருட்டி இராமச்சந்திரன், எம். ஜி. ஆர். மறைவின் பின்னர் அக்கட்சியிலிருந்து விலகி பாட்டாளி மக்கள் கட்சியில் இணைந்து கொண்டவர் என்பது தெரிந்ததே.

---

## வாக்குறுதிகளை பாக்·அரசு நிறைவேற்ற வேண்டும்

**மன்னிப்பு சபைகோரிக்கை**

பாகிஸ்தான் தான் கொடுத்திருந்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி பல ஆண்டு காலமாக அந்நாட்டில் நிலவிவரும் மனிதஉரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சர்வதேச மன்னிப்புச்சபைபாகிஸ்தான் புதிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

துணை இராணுவப் படையினர், ஆயுதப்படையினர் மற்றும் பொலிசாரின் காவலில் இருக்கும் போதே கைதிகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் சித்திரவதைகள் பாகிஸ்தானில் பெருமளவில் பரவிப் பெருகிவிட்டதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த அமைப்பு வாசிங்டனில் அண்மையில் வெளியிட்ட 76பக்க அறிக்கை ஒன்றில் மேலும் அரசியல் கொலைகளும், ஆட்கள் காணாமல் மறைந்து போவதும், மிகத் தீவிரமான மனித உரிமை மீறல்கள் ஆகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

---

## ரஷ்யத் தேர்தல் குறித்து கொர்பச்சேவ் அதிருப்தி

(மாஸ்கோ)

ரஷ்யாவில் நடைபெற இருக்கும் தேர்தல்கள் அவசரமானதும், குடியரசு ரீதியற்றதும் ஆகும் என்று முன்னாள் சோவியத் ஜனாதிபதி மிக்கயில் கொர்பச்சேவ் குற்றம் சாட்டியுள்ளார். அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில், ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சினின் பொருளாதாரச் சீர்திருத்தங்களில் தமக்கு நம்பிக்கை இல்லை என்றும், தெரிவித்த அவர் டிசம்பர் 12-ம் திகதி நடைபெறும் தேர்தலில் போட்டியிடும் 13 கட்சிகளில் எதற்கு ஆதரவளிப்பது என்பது பற்றி எதையும் தெரிவிக்கவில்லை

ஐரோப்பாவிற்கான தனது விஜயத்தினை மேற்கொள்வதற்குமுன் மாஸ்கோ விமான நிலையத்தில் வைத்து பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர்தெரிவித்ததாவது அதிகாரிகள் தேர்தலை நடத்துவதற்கு அவசரப்படுகின்றனர். என்ன நடக்கிறது என்று எவருக்கும் தெரியாது. விளங்கிக் கொள்ளாத மக்களில் பலர் இறுதியில் வாக்களிக்காமல் விடக்கூடும்.

ரஷ்யாவின் ஐக்கியத்திற்கும் உடன்பாட்டிற்குமான கட்சியை கடுமையாகத் கண்டித்த கொர்ப்பச்சேவ், அதன் தலைவர் செர்கேஷக்ராஸ் சாமர்த்தியமும் திறமையும் உள்ளவர். ஆனால் பதவி மோகம் கொண்ட இவர் ஆபத்தானவர் என்று வர்ணித்தார்.

ரஷ்யாவின் குடியரசுக் கட்சி, நிக்கொலாய் ட்ராங்கின் தலைமையிலான மத்திய குழு, பொருளியலாளரான கிறகறி யவ்வின்ஸ்கி தலைமையிலான லிபரல் கட்சி, அர்காடி வொலீஸ்கி தலைமையிலான கைத்தொழிலாளர்களின் கட்சி என்பவற்றை கொர்பச்சேவ் புகழ்ந்த போதும் எந்தக் கட்சிக்கு தான் வாக்களிக்கப் போகிறேன் என்பதை தெரிவிக்கவில்லை.

---

## ரஷ்யா-குவைத் பாதுகாப்பு ஒப்பந்தம்

(மொஸ்கோ)

ரஷ்யாவும் குவைத்தும் பாதுகாப்பு கூட்டுறவு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டன வளைகுடாவில் சமாதானத்தை ஏற்படுத்த ரஷ்யா செயல்பட இந்த ஒப்பந்தம் உதவும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்திற்கமைய இருநாடுகளுக்குமிடையில்கூட்டுறவுபலப்படுத்தப்படும் பாதுகாப்பு அமைச்சு பிரதிநிதிகள் மற்றும் ஊழியர்கள் இருநாடுகளுக்கும் பரிமாற்றம் செய்து கொள்ளப்படுவர் கூட்டு இராணுவ ஒத்திகை, இராணுவ பயிற்சி என்பன ஒழுங்கு செய்யப்படும். ஆயுத விற்பனையும் தேவைப்படின் இடம்பெறும். ஒப்பந்தத்தில் இருநாட்டு பாதுகாப்பு அமைச்சர்களுமான ஜெனரல் பாவல் கிரசேவ், ஷேக் அலி சபா ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

---

**காட்டின் மரம் உயர நாட்டின் தரம் உயரும்**

# இலங்கைக்கு ஏற்ற ஆயுதங்களே கொள்வனவு செய்ய வேண்டும்!

## ஊழலைத் தடுக்க வழி இதுதானாம்

(கொழும்பு)

இனி அரசு புதிய ஆயுதங்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்யும் போது இலங்கையின் நிலைமைகளுக்கு ஏற்றவகையிலானவற்றையே கொள்வனவு செய்யும் இதன் மூலம் இராணுவத்தினுள்ளேயே இருக்கும் லஞ்சப் பிரிவுகளுக்கு லாபம் கிடைப்பதை தடுக்க முடியும் என ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சில சக்தி வாய்ந்த பிரிவினர் தாம் கமிஷன் பணம் பெறும் முகமாக குறிப்பிட்ட சில நிறுவனங்களிடமே ஆயுதக் கொள்வனவு செய்ய முயற்சிக்கின்றனர் இந்த ஆயுதங்கள் இராணுவ நடவடிக்கைகளுக்கு உகந்தவையாக இல்லை எனவும் அந்த ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்

இராணுவத்தையும் கடற்படையையும் மீள அமைப்பதற்கு அவர்களது மனநிலையை ஊக்குவிக்க அரசு புதிய முயற்சிகளில் இறங்கியுள்ள இச்சந்தர்ப்பத்தில் புலிகள் கிழக்கில் மீண்டும் படையினரை தாக்குகின்றனர். தொலைத் தொடர்பு சாதனங்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுவதாக இங்குள்ள கனிஷ்ட அதிகாரியை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பிற்கென ஒரு அமைச்சர் இன்மையே நிலைமையை மேலும் மோசமாக்குவதாகவும் அரசியல் தலைமைப் பீடத்திற்கும் பாதுகாப்புப் படைகளுக்கும் இடையே எந்த தொடர்பும் இல்லை எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மறைந்த ரஞ்சன் விஜேரட்ன போன்றவர்களே எமக்கு தேவை என படை வட்டாரங்கள் கூறுவதாக அப்பத்திரிகை குறிப்பிடுகிறது.

# வயோதிபரை இளைஞர்கள் வழிமறித்துத் தாக்கினர்

## பணமும் பறிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்று கொண்டிருந்த வயோதிபர் ஒருவர் இனம் தெரியாதோரால் பலமாக தாக்கப்பட்டதுடன் பணத்தையும் பறிகொடுத்த சம்பவம் ஒன்று கல்வியங்காட்டு பகுதியில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது நேற்றுநண்பகல் 12 மணியளவில் தான் வீடு நோக்கி சென்று கொண்டிருந்த போது திடீரென எதிர்ப்பட்ட இரு இளைஞர்கள் தம்மை இடைமறித்து திடீரென பொல்லால் தாக்கியதாகவும் இதனால் தனது தலையில் காயம் ஏற்பட்டு தான் மயக்கமடையும் நிலையில் மீண்டும் முதுகுப்புறத்திலும் அடித்ததாகவும்மயக்கம் தெளிந்த போது இடுப்பில் வைத்திருந்த மூவாயிரத்து நூறு ரூபாவை காணவில்லை எனவும் தெரிவித்தார்.

படுகாயத்திற்குள்ளான சின்னராசா (வயது 68) என்பவர் யாழ்போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ச, பா)

# மிதிவெடியுடன் விளையாட்டு; சிறுவன் படுகாயம்

கடலில் மிதந்துவந்த மிதிவெடி ஒன்றை எடுத்து கல்லால் குத்திய போது அது வெடித்ததில் சிறுவன் ஒருவன் காயமடைந்தார்.

நேற்றுக் காலை 11.00 மணியளவில் குருநகர் தொடர்மாடி கடற்பகுதியில் நடைபெற்ற மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவர் தொடர்மாடியைச் சேர்ந்த லோறன்ஸ் நிமல் றெஜினோல்ட் (வயது 10) என்பவராவார் இச்சம்பவம் பற்றி அவர்விபரிக்கையில்; மேற்படி பொருளை நேற்று முன்தினம் இரவு தான் கண்டெடுத்ததாகவும் நேற்றைய தினம் அதன் மீது சந்தேகம் ஏற்பட்டதால் கடற்புலிகளிடம் ஒப்படைக்க கொண்டு சென்ற போது தனதுநண்பன்அதனை வாங்கி நிலத்தில் வைத்து விட்டு கல்லால்எறிந்த போது அது வெடித்ததாகவும் தெரிவித்தார். (ச, பா, 21)

## விமானத் தாக்குதலில்

# கொல்லப்பட்டவருக்காக 2000ரூபா மரண செலவு படி

விமானத் தாக்குதலின் போது கொல்லப்பட்டோரின் குடும்பங்களுக்கு 2000 ரூபாவை மரணச் செலவு படியாக யாழ். செயலகம் வழங்கியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குருநகர் பாஷையூர் பகுதியில் நடந்த விமானத் தாக்குதலின் போது பலியானோரின் குடும்பங்களுக்கு வழங்குவதற்கென 84 000 ரூபாவை யாழ். செயலக புனர்வாழ்வு பிரிவு யாழ். உதவி அரசாங்க அதிபருக்கு வழங்கியுள்ளது. அவர் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இதனை வழங்கி வருகிறார். (ச, பா)

# மூவர் அனுமதி

(நமது நிருபர்)

கிளிநொச்சிப் பகுதியில் புக்காரா விமானங்கள் நடாத்திய குண்டுவீச்சு தாக்குதலின் போது காயமடைந்த மூவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கனகாம்பிகை குளம் பகுதியில் வீசிய குண்டுகளினால் காயமடைந்த நாகேந்திரன் வாணிசிறி (வயது 25), இவரது மகள் கிரிஷாந்தினி (வயது2) மற்றும் நகுலராசா புவீந்திரன் (வயது10) ஆகியோரே நேற்று அதிகாலை கிளிநொச்சியிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டவர்களாவர். (ச) பா)

# மூன்று இழுவைப்படகுகள் உடன் அனுப்பி வைக்குக

## யாழ். செயலகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்கு துறையில் பொருள்களை இறக்கிவந்த நான்கு இழுவைப் படகுகளும் பழுதடைந்தமையைத் தொடர்ந்து புதிதாக மூன்று இழுவைப்படகுகளையேனும் உடன் அனுப்பி வைக்கும்படி யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரைக் கேட்டுக்கொண்டுள்ளது.

மேற்படி வேண்டுகோள் தற்சமயம் கொழும்பில் தங்கியிருக்கும் யாழ் அரச அதிபர் மூலமாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு விடுக்கப்படவுள்ளது. அத்துடன் யாழ். அரச அதிபரும் இந்நிலைமையை தெளிவுபட எடுத்துரைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி இழுவைப்படகுகளை அனுப்பிவைக்கும்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் தனியாக அத்தியாவசியசேவைகள் ஆணையாளரிடம் கேட்டுக்கொள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது.

பழுதடைந்த இழுவைப்படகுகளில் ஒன்றே தற்சமயம் திருத்தப்பட்டு சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றமை தெரிந்ததே. இவற்றில் மேலும் ஓர் இழுவைப்படகு முற்றாக பயன்படுத்த முடியாதுள்ளது எனவும் இரண்டு திருத்தியே பயன்படுத்தப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே தற்சமயம்பொருள்களை இறங்குவதற்கு உடனடியாக மூன்று இழுவைப்படகுகளையேனும் அனுப்பி வைக்கப்பட்டாலே பொருள்களை இறக்கமுடியும் என தெரிவிக்கப்படுகிறது. (பா) (ச)

# ஐ.தே.க பா.உ - சபாநாயகர் பலத்த வாக்குவாதம்

சிறிலங்கா பாராளுமன்ற சபாநாயகர் எம் எச். முகம்மட்டிற்கும் அரசாங்க கட்சி உறுப்பினர்களுக்கும் இடையே நேற்று பாராளுமன்றத்தில் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது.

பாராளுமன்றத்தினுள் அதிரடிப்படை பொலிசார் ஆயுதங்களுடன் நுழைய முடியாது என சபாநாயகர் இட்ட உத்தரவை சபாநாயகர் வாபஸ் பெறவேண்டும் அத்துடன் இவ் விவகாரம் பற்றி முடிவு செய்ய விசாரணைக்குழு ஒன்று அமைக்க வேண்டும் என அரசாங்கக் கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்ததை அடுத்தே இவ் வாக்குவாதம் ஏற்பட்டது.

சபாநாயகர் இதுபற்றி கூறுகையில் ''நான் அளித்த தீர்ப்பு சரியானது இதற்கு விசாரணைக்குழு ஒன்று அவசியம் இல்லை வேண்டுமானால் என்மீது நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வாருங்கள்'' என தெரிவித்தார்.

## கொழும்பு

திரிகைக்கு தெரிவித்துள்ளனர்.

சென்ற மாகாண சபை தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்கவின் கம்பஹா மாவட்டம் பியகம தொகுதியில் ஐ. தே. க. தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிய வருகின்றது. இதேவேளை இத்தொகுதிக்கு முன்னாள் மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் மனைவி அல்லது மகனுக்கு கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது

## தோல்வியுறும்

சிசில் வைத்தியரட்னா பேசும் போது தொடர்ச்சியாக

## 39 இராணுவ

வழங்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட எஸ்.டி. தென்னக்கோன், மீராய் சாய்பூ, வி.ஜே ரணவீர எச். பி. திக்பொட்டுமுனுவ, ஜே டபிள்யு பி. சரதுங்க டபிள்யூ டி. அல்விஸ், ஜே.வி. டபிள்யு ஜெயசுந்தர, ஜே. கெட்டி ஆராய்ச்சி ஆகியோர் லெப். கேணல் பதவியில் இருந்து கேணல பதவிக்கு உயர்த்தப்பட்டுள்ளார்.

மேலும் 28 மேஜர்கள் லெப்டினன்ட் கேணல்களாக பதவிஉயர்த்தப்பட்டுள்ளனர்

வல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் மேற்படி கூட்டத்தில் வைத்தே சிசில்வைத்தியரட்னா தனது பதவி விலகல்

## பூநகரி

விபரிப்பும் ஒளிபரப்பப்படவுள்ளது.

சி. என். என் தொலைக்

# ஓராண்டு திவச அழைப்பு



## கடற்புலி கப்டன் கோணேஸ்வரன்

(குகதாஸ் பாலதாஸ்)

20-11-1992 அன்று கடலில் வீரச்சாவடைந்த திருக்கோணமலையைச் சேர்ந்த கடற்புலி கப்டன் கோணேஸ்வரன் (குகதாஸ் பாலதாஸ்) இன் முதலாண்டு திவசதினம் (இன்று) 08-12-1993 கல்வியங்காடு, நல்லூர் வடக்கு கிருஷ்ணபவனம் இல்லத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளதை உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கிருஷ்ண பவனம்
கல்வியங்காடு,
நல்லூர் வடக்கு.

அண்ணன்
(கு. கண்ணன்)

(6810)

# மரண அறிவித்தல்கள்



வெடித்ததில் சிறுவன் ஒருவன் காயமடைந்தார்.

நேற்றுக் காலை 11.00 மணியளவில் குருநகர் தொடர்மாடி கடற்பகுதியில் நடைபெற்ற மேற்ப' சம்பவத்தில் காயமடைந்தவர் தொடர்மாடியைச் சேர்ந்த லோறன்ஸ் நிரல் றெஜினோல்ட் (வயது 10) என்பவ

இரவு தான் கண்டெடுத்ததாகவும் நேற்றைய தினம் அதன் மீது சந்தேகம் ஏற்பட்டதால் கடற்புலிகளிடம் ஒப்படைக்க கொண்டு சென்ற போது தனதுநண்பன்அதனை வாங்கி நிலத்தில் வைத்து விட்டு கல்லால்எறிந்த போது அது வெடித்ததாகவும் தெரிவித்தார். (ச, பா, 21)

## விமானத் தாக்குதலில்
# கொல்லப்பட்டவருக்காக 2000ரூபா மரண செலவு படி

விமானத் தாக்குதலின் போது கொல்லப்பட்டோரின் குடும்பங்களுக்கு 2000 ரூபாவை மரணச் செலவு படியாக யாழ். செயலகம் வழங்கியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குருநகர் பாஷையூர் பகுதியில் நடந்த விமானத் தாக்குதலின் போது பலியானோரின் குடும்பங்களுக்கு வழங்குவதற்கென 84 000 ரூபாவை யாழ். செயலக புனர்வாழ்வு பிரிவு யாழ். உதவி அரசாங்க அதிபருக்கு வழங்கியுள்ளது. அவர் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இதனை வழங்கி வருகிறார். (ச, பா)


### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
### 07- 12 -93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11617

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
27-2761, 28-1636, 24-5121, 27-4024, 22-7271
24-6473, 27-5907, 26-7068, 26-3998, 24-7327

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
43-3516, 24-1259, 26-4610, 27-7537



JAFFNA COLLEGE · JESUS LIGHT OF THE LIFE · 1823 · 1872 · CEYLON

### யாழ்ப்பாணக் கல்லூரி
### பட்டப்படிப்புப் பிரிவு

எழுதுவினைஞர் சுருக்கெழுத்தாளர்

தெரிவுக்கான, போட்டிப் பரீட்சைக்கான

### வகுப்புகள்

**ஆரம்பம்: 10-12-1993 மு. ப. 11-00 மணிக்கு**

**முழுக்கட்டணம்: 250/- மட்டுமே**

விபரங்களுக்கு:

**யாழ்ப்பாணக் கல்லூரி**
464, ஆஸ்பத்திரி வீதி,
(வர்த்தக வங்கிக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

(சி-8078)


(நமது நிருபர்)

கிளிநொச்சிப் பகுதியில் புக்காரா விமானங்கள் நடாத்திய குண்டுவீச்சு தாக்குதலின் போது காயமடைந்த மூவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கனகாம்பிகை குளம் பகுதியில் வீசிய குண்டுகளினால் காயமடைந்த நாகேந்திரன் வாணிசிறி (வயது 25), இவரது மகள் கிரிஷாந்தினி (வயது2) மற்றும் நகுலராசா புவீந்திரன் (வயது10) ஆகியோரே நேற்று அதிகாலை கிளிநொச்சியிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டவர்களாவர். (ச) பா)

## பூநகரி

வி பரிப்பும் ஒளிபரபப்பப்படவுள்ளது.

சி. என். என் தொலைக் நிறுவனத்தின் தென் ஆசிய பிரிவிற்கான தலைவர் ஆசி ஸ்றே என்பவருக்கு பிரதமர் பேட்டியளிப்பதாக இந்த நிகழ்வு அமைகிறது. இம்மாத முற்பகுதியில் இது சி. என். என் நிறுவனத்தால் ஒளிப்பதிவு செய்யப்பட்டு எடுத்து செல்லப்பட்டது

பிரதமர் அளித்த இப்பேட்டியில் பூநகரியில் இராணுவம் தன்னை மீளசீரமைத்து வருகிறது என்று கூறியபோதிலும் நாகதேவன் துறையில் கடற்படையினர் எவ்வித புனரமைப்பிலும் ஈடுபடவில்லை என்பதை ஒப்புக் கொண்டிருந்ததாகவும் போர் வடக்கில் மேலும் இரு வருடங்களுக்கு நீடித்து அதன் பின் அங்கு தேர்தல் நடத்தக் கூடியதாக இருக்கும் என நம்பிக்கை வெளியிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## விடுதலைப்

நாம் ஆராய்ந்தோம் புலனாய்வு தகவல்கள் வந்துசேர நடவடிக்கைகளும் வெற்றிகரமாக அதிகரிக்கப்படும். எமது புலனாய்வை அபிவிருத்தி செய்யவேண்டும்.

மூலோபாய திட்டங்கள் பரிசீலிக்கப்படுவதுடன் ஆலோசனைகள் கலந்தாலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அனைத்து சிபார்சுகளும் அவை இறுதி முடிவாக எடுக்கப்பட முன் பரிசீலிக்கப்படும். முழுமைபான வழிகாட்டலுக்கு ஜனாதிபதியே பொறுப்பு. நாட்டின் ஜனாதிபதி இராணுவத் தலைவரல்ல. இராணுவத் தளபதியாக இருந்த ஐசனோவர் கூட ஜனாதிபதியானதும் தரைப்படைக்கு தலைமை வகிக்கவில்லை. அவர் முழுமையான வழிகாட்டலைத்தான் வழங்கினார். இதைத்தான் டி.பி. விஜேதுங்கவும் செய்கிறார். என்று பிரதமர் தமது உரையில் மேலும் தெரிவித்தார்.

கர் வாபஸ் பெறவேண்டும் அத்துடன் இவ் விவகாரம்

## கொழும்பு

திரிகைகசு தெரிவித்துள்ளனர்.

சென்ற மாகாண சபை தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்கவின் கம்பஹா மாவட்டம் பியகம தொகுதியில் ஐ. தே. க. தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரியவருகின்றது. இதேவேளை இத்தொகுதிக்கு முன்னாள் மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் மனைவி அல்லது மகனுக்கு கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது

## தோல்வியுறும்

சிசில் வைத்தியரட்னா பேசும் போது தொடர்ச்சியாக தோல்விகளைக் கண்டுவரும் இராணுவத்தின் தளபதியாக தொடர்ந்தும் நான் இருக்க விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

அதேவேளை மேற்படி கூட்டத்தின் போதே இராணுவத் தளபதி பதவியில் இருந்து விலகிக்கொள்ளும்படி சிசில் வைத்தியரட்னாவிடம் கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும் இதற்கு இணங்கவே இவர் இராஜினாமாச் செய்வதற்கு முடிவெடுத்ததாகவும் கொழும்பில் இருந்து கிடைக்கும் தக

## தொடர்ச்சியான

தன

இதன்போது தோட்டத்தில் வேலைசெய்துகொண்டிருந்த செல்லப்பா பொன்னுத்துரை (வயது 57) படுகாயமடைந்தார்.

இவர் சிகிச்சைக்காக தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச), (பா)

ல்லா பிரேரணை கொண்டு வாருங்கள்'' என தெரிவித்தார்.

## 39 இராணுவ

வழங்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட எஸ்.டி. தென்னக்கோன், மீராய் சாய்பூ, வி.ஜே ரணவீர எச். பி. திக்பொட்டுமுனுவ, ஜே டபிள்யு பி. சரதுங்க டபிள்யூ டி. அல்விஸ், ஜே.வி. டபிள்யு ஜெயசுந்தர, ஜே. கெட்டி ஆராய்ச்சி ஆகியோர் லெப். கேணல் பதவியில் இருந்து கேணல பதவிக்கு உயர்த்தப்பட்டுள்ளார்.

மேலும் 28 மேஜர்கள் லெப்டினன்ட் கேணல்களாக பதவிஉயர்த்தப்பட்டுள்ளனர்

வல்கள் தெரிவிக்கின்றன' அத்துடன் மேற்படி கூட்டத்தில் வைத்தே சிசில்வைத்தியரட்னா தனது பதவி விலகல் தொடர்பான சில ஆவணங்களையும் சமர்ப்பித்ததாகவும் தெரியவருகிறது.

இதேவேளை ஜனாதிபதி இதற்கு முன்னர் இருதடவைகள் யுத்தத்தைத் திறம்பட நடத்த முடியாவிட்டால், பதவியில் இருந்து விலகுமாறு இராணுவத் தளபதிக்கு தெரிவித்திருந்தாராம். இவ்வாறு கோரிய இரண்டாவது சம்பவம் பூநகரியில் விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்ட போது விடுக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

## தென்னிலங்கையில்

உணரப்பட்டுள்ளது

இரு நிமிட நேரம் நீடித்த இவ் நில நடுக்கம் ரிஜ்டர் கோலில் 5 ஆக கணிப்பிடப்பட்டதாக புதுடில்லி நில நடுக்க ஆய்வு அலுவலகம் அறிவித்தது. இலங்கை-இந்திய கடற்பகுதியில் இந்து சமுத்திரத்தில் இந்த நில நடுக்கமையப் பகுதியிருந்தது

## கொப்பேக்கடுவ

பேகடுவ நாளை 9ஆம் திகதி எனது கணவரின் மத நிகழ்ச்சிகள் நடாத்த ஏற்பாடு செய்தோம். அதை தற்போது காலவரையறையின்றி ஒத்திப் போட்டுள்ளோம் என்றார். மேலும் எந்தக் கருத்தும் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார்.

இத்தகைய உயர் இராணுவ அதிகாரியின் இறப்பு குறித்த மதவைபவங்கள், ஜனாதிபதி அமைச்சர்கள், எம்பிகள் ஆகியோர் முன்னிலையிலேயே நடப்பது வழமை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கொப்பேக்கடுவவின் மதவைபவம் ஒத்திவைக்கப்பட்டமை குறித்து கருத்துக்கூற இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ஹப்ஹ ராச்சி என்பவரும் மறுத்துவிட்டார்.

## அதிவேக

நான்கு பீரங்கிப்படகுகளும் இலங்கை ரூபாவில் 360 மில்லியன் ரூபா பெறுமதியானவை. இரண்டாவது படகு ஜனவரி இறுதியில் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை எஞ்சிய இரு படகுகளையும் கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்திலேயே கட்டுவதற்கு வசதியாக சம்பந்தப்பட்ட பிரான்ஸ் நிறுவனம் தொழில்நுட்ப உதவியை சிறிலங்காவிடம் வழங்க முன்வந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக சிமோன் மரைன் என்னும் மேற்படி நிறுவனம் போர்ப்படகுகள் கட்டுவது தொடர்பான பயிற்சியை 16 இலங்கையர்களுக்கு அளித்து வருகிறது. நான்கு பீரங்கிப்படகுகளும் முழுமையாக அடுத்தவருடம் ஜூன் மாதத்தில் இயங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மரண அறிவித்தல்கள்



## பரமு கந்தையா

(உரிமையாளர், பரந்தன் கணேசா ஸ்ரோர்ஸ்)

இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், பரந்தன் கணேசா ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான பரமு கந்தையா காலமானார். 4-12-93இல் புலோலி ஆனை விழுந்தான் மயானத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்றதென்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

''கோணர்வளவு''
புலோலி தெற்கு,
புலோலி.

க. கிருஸ்ணபிள்ளை
(மைத்துனர்)

(6800)

## செ. கந்தையா

[சப்பறம் தண்டிகை அமைப்பாளர்]

(ஓடை மாவிட்டபுரம்)

இவர் மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் தற்போது மல்லாகத்தில் வசித்தவரும் ஆகிய ஓடைக் கந்தையா காலமானார். இவர் சின்னமணியின் (தங்கம்) அன்புக்கணவரும், குகதாசன், (லங்கா சீமெந்து லிமிட்டெட்), வரதராசன், சண்முகவடிவு (ஆசிரியை வீமன்காமம் மகாவித்தியாலயம்), சத்திய தாசன் (ஆசிரியர், ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை பலாலி), சபேசன், இராகினி, அகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (இன்று) 8-12-93 2 மணிபளவில் மல்லாகத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

முருகநாமம்
சிறைவாசம் வீதி,
கோணப்புலம் ஒழுங்கை,
மல்லாகம்.

மணிவண்ணக்குருக்கள்
(மாவிட்டபுரம்)

(6811)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.